வொரு அசம்பாவிதமும் ஏற்படாத வகையில், அமைதியான முறையில் தொழில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வதோடு, ஈடுபட்ட மீனவர்கள் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருப்பதன் காரணமாக அந்த விபத்து காப்புறுதித் திட்டத்தின்கீழ் நிதியுதவி நிச்சயமாக அவர்களுக்கு வழங்கித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. மா. சுந்தரதாஸ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) பொது மறுவாழ்வுத் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் 118-வது அறிக்கையை பொதுக் கணக்குக் குழுவின் தலைவராகிய நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையை அளிப்பதற்கு முன் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை இரண்டு ஆண்டுகள் இந்தக் குழுவினுடைய உறுப்பினராக இருக்கச் செய்து, இந்த ஆண்டு இந்தக் குழுவினுடைய தலைவராக்கிய எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தாள் பணிந்து, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் 141 முதல் 144 வரையிலான நான்கு அறிக்கைகளை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இரா. அப்பு நடேசன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.